**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No.23/2019 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ராமதுரை | தந்தை/கணவர் பெயர்:மெய்யான் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2025

---

**(1, 2 எதிரிகள் ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**17.07.2025 முதல் விசாரணை:**

1. நான் தற்போது வர்ணப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் சென்டிரிங் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். (**அந்த கையொப்பம் மட்டும் அதசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). 2012 ம் வருடம் நான் வேலைக்கு போகும் போது காலை சுமார் 08.30 மணிக்கு பைபாஸ் ரோட்டில் புழுதிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் மக்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று என்னிடம் சொல்லவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அதில் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

2. 21.03.2012 ம் தேதி காலை 09.00 மணிக்கு உலகம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் புழுதிப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.14/2012 வழக்கின் சம்பவ இடத்தை மதுரை திருச்சி பைபாஸ் ரோட்டில் பார்வையிட்டு விசாரணை செய்து மாதிரி வரைபடம் தயார் செய்து என்னிடமும், குமார் என்பவரிடமும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் பெற்றார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.